# DEPOSITION OF WITNESS

# IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.I, POLLACHI

Case No. CC 97/2018

Prosecution Witness 3

| | | | |
|---|---|---|---|
| Name | : சிவகாமி | Caste | : |
| Father's Name/ Husband's Name | : த/பெ.பழனிச்சாமி | Calling | : |
| Village | : | Religion | : |
| Taluk | : | Age | : |

Solemnly affirmed in accordance with the provisions of the Oath Act, 1969 (Central Act 44 of 1969) on the 10th day of May 2024.

(Accused absent. Petition u/s.317 Crpc filed and allowed)

<u>முதல் விசாரணை</u> :

1. நான் தற்போது செஞ்சேரிபுத்தூர் வடுகபாளையத்தில் குடியிருக்கிறேன். நான் கூலி வேலை செய்கிறேன். அசா 1 எனது மகள் ஆவார். அசா 2 எனது கணவர் ஆவார். கடந்த 2016 ம் ஆண்டு ஒருநாள் நான் வேலைக்கு சென்றுவிட்டேன். நாங்கள் வேலைக்கு சென்றபிறகு வீட்டில்எனது மகள் தனியாக இருந்தாள். அச்சயமத்தில் பக்கத்து தெருவை சேர்ந்த எதிரி செல்வன் எனது மகளுடன் யாரும் இல்லாத சமயத்தில் வலுக்கட்டாயமாக உடலுறவு வைத்துக்கொண்டுள்ளார். 3 மாதங்கள் கழித்து என் மகள் பிருந்தா அசா 1 என்னிடம் தெரிவித்தாள்.

2. எனது மகள் ஒருநாள் வாந்தி எடுத்தபோது இது சம்மந்தமாக நான் கேட்டேன். யார் என்று கேட்டபோது மேற்படி எதிரி செல்வன் என்று அசா 1 என்னிடம் கூறினார். இந்த தகவலை நான் எனது கணவரிடம் தெரிவித்தேன். நானும் எனது கணவரும் எதிரி செல்வனிடம் மேற்படி சம்பவம் குறித்து கேட்டோம். அதற்கு எதிரி செல்வன் எங்களை கொன்றுவிடுவதாக மிரட்டினார். எனவே பயந்துபோய் இது சம்மந்தமாக பொள்ளாச்சி மகளிர் காவல் நிலையத்தில் எனது மகள் புகார் கொடுத்தார்.

3. அதன்பின்னர் எனது மகளுக்கு உடுமலைப்பேட்டை அரசு மருத்துவமனையில் வைத்து ஒரு பெண் குழந்தை பிறந்தது. தற்போது அந்த பெண் குழந்தைக்கு 7 ½ வயது ஆகிறது. அந்த புகாரின்பேரில் போலீசார் என்னை விசாரித்தனர்.

எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:

1. எதிரி எங்களுக்கு கொலை மிரட்டல் விடுத்தாக வழக்கிற்கு வலுவூட்டும் விதமாக கூறுகிறேன் என்றால் சரியல்ல. வழக்கு சம்மந்தமாக அசா 1 கூறிதான் எனக்கு தெரியும். எதிரி என் மகளை திருமணம் செய்ய மறுத்ததால்தான் நிலையத்தில் புகார் கொடுத்தோம் என்றால் சரிதான். ஞாயிற்று கிழமைகளில் நான் வீட்டில்தான் இருப்பேன் என்றால் சரியல்ல, வேலைக்கு சென்றுவிடுவேன். எதிரி மீது பொய் புகார் கொடுக்கப்பட்டள்ளது என்றால் சரியல்ல.

மறு விசாரணை: இல்லை.

Taken down by/before me in open Court, read over/interpreted to the witness in the presence of the accused/Accused's pleader and admitted by the witness to be correct.

(Sd/M.A.Suvedharanyan)
Judicial Magistrate No.I,
Pollachi.